அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்: 16 /2017
தேதி: 31.1.2017

## மாணவர்களின் எதிர்காலம் கருதி 110 விதியின் கீழ் முதலமைச்சரின் விடுவிக்கும் அறிவிப்பு பாராட்டுக்குரியது.

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை.

ஜல்லிக்கட்டு போராட்டத்தின்போது வன்முறையில் ஈடுபட்டதாக சென்னையில் 312 பேரும், பிற மாவட்டங்களில் 175 பேரும் கைது செய்யப்பட்டனர். இதில் மாணவர்களும் அடங்குவர், மாணவர்களின் கல்வி மற்றும் அவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு சென்னையில் 21 பேரும், பிற மாவட்டங்களில் 15 பேரும் மொத்தம் 36 மாணவர்கள் முழுமையாக விடுவிக்கப்படுவார்கள் என்ற முதலமைச்சரின் இந்த அறிவிப்பு பாராட்டுக்குரியதாகும்.

ஜல்லிக்கட்டு போராட்டத்தில் ஏற்பட்ட கலவரங்கள் தொடர்பாக ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் தனி விசாரணை ஆணையம் அமைக்கப்படும் என்றும், சம்பந்தப்பட்ட காவல் துறையினர் மீதும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும், மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்காதவகையில் நிரந்தர மீன்சந்தை அமைத்து தரப்படும் என்ற முதலமைச்சரின் அறிவிப்பு.

மேலும் நீட் தேர்வு இல்லாமல் மருத்துவ கல்லூரியில் மாணவர்கள் சேர்க்கவும், பழைய நடைமுறையே தொடரும் என்று மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் விஜயபாஸ்கர் அவர்களால் சட்டமன்றத்தில் சட்ட முன்வடிவு தாக்கல் செய்யப்பட்டிருப்பது வரவேற்புக்குரியதாகும்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்